உ

சிவமயம்

கண்ணலிங்கேஸ்வரஸ்வாமி துணை



வட்டுக்கோட்டை — தெக்கிணப்பாய்

## கண்ணலிங்கேஸ்வரர் கண்ணாம்பிகை

# திருவூஞ்சல் திருவேசல்

## தனிப்பாடல்கள் - எச்சரிக்கை

## பராக்கு - லாலி கப்பற்பாட்டு

ஷெ கோவில் ஆதீன பரிபாலக தர்மகர்த்தாக்களால்
தமது அம்பிகா அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டவை
1923

மறுபிரசுரம்: ஷெ கோவில் பரிபாலனசபையும், தொண்டர் சபையும்.
1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# பதிப்புரை

யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள ஆலயங்களில் இது மிகவும் பழைமை வாய்ந்த ஆலயமாகும். இதற்கு இன்று உங்கள் கையில் அமர்ந்துள்ள இந்நூலே சான்றாகும். இந் நூல் 1923 ஆம் ஆண்டு அக்காலத்திருந்த தர்மகர்த்தாக்க ளால் இலவச வெளியீடாகத் தமது அம்பிகா அச்சகத்தில் வெளியிடப்பட்டது. இந்நூலிலுள்ள தனிப்பாடல்களை ஆதா ரமாக வைத்து ஆராய்ந்தோமானால் கூழங்கைச் சக்கர வர்த்தி காலத்தில் மந்திரிப் பதவி வகித்த வேதிய விற்பன் னராகிய சுப்பிரமண்ய சாஸ்திரிகள் அவர்களாலும், அவர் களது முன்னோராலும் அவருக்குப் பின்னோராலும் இவ் வாலயம் பரிபாலிக்கப்பட்டு வந்தது என அறியப்படுகிறது.

இலங்கையைப் போர்த்துக்கேயர் அரசாட்சி செய்ய முன்பே இவ்வாலயம் இருந்திருக்கிறது. இவ்வாலயத்தை அவர்கள் அழிக்க முற்பட்டபோது "மதாவின் கோயில்" எனப் பொதுமக்கள் கூறியமையால் அழிக்கப் பெறாமல் தப்பித்துக் கொண்டது. அப்போது மூலஸ்தானத்தில் கண்ணகியம்மனே இருந்ததாகவும் பின்பே சிவலிங்கம் மூலஸ்தானத்திலும் கண்ணகையம்மன் தெற்கு வாசலிலும் பிரதிஷ்டை பண்ணப்பட்டதாகவும் கூறப்படுகிறது. 1933 ஆம் ஆண்டுவரை இவ்வாலயம் இலங்கையிலேயே மிகப் பிரசித்தி பெற்ற ஆலயமாகத் திகழ்ந்து விளங்கியது. ஆனிமாத உத்தர நட்சத்திரத்தைத் தீர்த்தாந்தமாகக் கொண்டு மகோற் சவம் மிகச் சிறப்பாக நடைபெற்று வந்தது. ஒவ்வொரு உற்சவ தினத்திலும் கண்ணகி காதை, மார்க்கண்டேயர் சரித்திரம், சிறுத்தொண்ட நாயனார், சாவித்திரி சத்தியவான், வள்ளி திருமணம், மயானகாண்டம் போன்ற சமய சரித்திர நாடகங்கள் மூலம் மக்களுக்கு நன்னெறிகளைப் புகட்டி வந்துள்ளது.

6.
3.
2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1934 ஆம் ஆண்டுக்குப் பின் ஆறுமுகநாவலரின் மதிப்புக்குரிய மாணவரின் மாணவனும் வடமொழி, தென்மொழி வித்பன்னருமான சிவஸ்ரீ க. குருமூர்த்தி சிவாச்சாரியாரவர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. இவரது காலத்திலேயே இவரின் ஆதரவுடன் பரிபாலனசபை ஸ்தாபிக்கப்பட்டு தற்போதும் பரிபாலன சபையாலேயே இவ்வாலயம் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. புராதனமான இவ்வாலயத்தை புதுப் பொலிவுடன் நடாத்த இறைவன் திருவருளையும் தங்கள் ஒத்துழைப்பையும் நாடி நிற்கின்றோம்.

பரிபாலன சபையினரும்,

05 - 05 - 91 தொண்டர் சபையினரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

# கண்ணலிங்கேசர் கண்ணகாம்பிகா பேரிற் சொல்லிய தனிப் பாக்கள்

காசிப கோத்திரரும் மந்திரிவம்சருமான
சுப்பிரமண்ய சாத்திரிகள்
சொல்லியது

கலித்துறை

கொங்காருஞ் சோலை வட்டுநன் னாடசொற் கோகனகம்
பங்காரும் பித்தர் குலப்பதி யாய்மிகு பண்புநிறை
கிங்கார தெக்கிணைப் பாயொளிர் செல்வ திகாம்பரனே
கங்கா தரசிவ கண்ணலிங் காவெமைக் காத்தருளே

ஷியாரின் குமாரர்
இராமசாமி சாஸ்திரியார் அவர்கள்
சொல்லியது

கலிவெண்பா

தேங்கா ரணம் பயி றெக்ணைப் பாயொளிர் செந்திருவே
பூங்கா வனம் பொலி வட்டு நகரொளிர் பூரணமே
நீங்காத செல்வ மாகேச பாக்கிய நின்மலையே
ஓங்காரி யேகண்ணா காம்பிகை யேசிவை யுத்தமியே

ஷியாரின் குமாரர்
நாகேச பாரதி அவர்கள்
சொல்லியது

கலிவெண்பா

பொன்னாருந் தெக்கிணைப் பாயுறை புங்கவ தந்திமுக
முன்னாரும் வைரவ யாழைப் பழிமொழி மோகனமார்
நன்னாமக் கண்ணகை யம்பிகை யேநனி நாற்பொருளும்
இன்னே யருளுக வம்மா இரத்தின விந்திரையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணலிங்கேச கீதை

## காப்பு

கண்ணகாம் பிகைகீதை கண்ணலிங்க கீதைசொலப்
பண்ணமைக்கும் கற்பகத்தாள் பற்று

## நூல்

சீராருஞ் சூர்யகுலஞ் சேர் விஜய கூழங்கை
வாராருஞ் சக்கர வர்த்திமகிழ் - ஏராரும்
மாமதுரை யாதீனன் வளனோங்கு வேதியன்சீர்
ஏமமலி மாகேச ரிஷிநிலமாய் - பூமலியும்
சந்த மகில்பாலை தலைசூடசஞ் செம்ணத்தி
இந்துவளர் தெங்கிலவு ரஸ்தாலி - சுந்தரமார்
புன்னை மகிழரசு புன்காலம் சாதிவளர்
பன்னை வளமிலங்கும் பான்மையதாய் - மன்னுதிரு
மாடமதில் கோபுரமும் மன்றுமணி செய்குன்றும்
நீடு திருத் தெக்கிணப்பாய் நின்மலையே - பீடுபெறும்
லங்கையாழ்ப் பாணமதி லெண்டகைய வட்டுநகர்
மங்கலமே யம்பிகையே மாமணியே -சங்கநிதி
ஆடிமகோற் சவமகற்றி ஆறாதி நாறநமக்
காடிமகோற் சவமருள்செ யம்பிகையே - தேடுபொருள்
பண்ணகாம் பிகை மொழியாய் பாவலர்க்கும் நாவலர்க்குங்
கண்ணகாம் பிகை மொழியாங் கற்பகமே - நண்ணுபொருள்
சித்திதா புத்திதா செல்விதா கல்விதா
முத்திதா நன்றே மொழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷியாரின் குமாரர்

சிவசுப்பிரமண்ய சிவாச்சாரியாரர்கள்

சொல்லிய

கலிவெண்பா

பொன்னிலங்கை யாழ்ப்பாணம் பொங்குதிரு வட்டுநகர்
முன்னருண சோதிவன முன்னுகந்தாய் - வன்னமலி
பூக மடல் சிதறிப் போர்வாளை மீன்குதித்து
மாக வமுதருந்தி மாறிமிகும் - வாகைசெறி
மாகேச பாக்கியமா மல்குதிருத் தெக்கிணப்பாய்
யோகீச வாகீச ருத்திரனே - பாகார்ந்த
பித்தர் குளப்பதியாய் பேரா வமுதெனலாம்
சித்தமிசை ஓங்குந் திவாகரனே - சுந்தமலி
தத்துவத்தின் மேலோனே சங்கரனே சாசுவத
சுத்தவித்தை யீசுரனாம் சுந்தரனே - சத்திமகிழ்
சாதாக்கிய சக்தசிவந் தானாகி யென்று நிறை
மீதார் பரம்பொருளே முன்னவனே - போதாரும்
கொன்றைமதி கங்கைபுனை கோல்மலி செஞ்சடையாய்
பொன்றிகழும் வெள்விடையாய் புங்கவனே - மன்றிலங்கி
ஆனந்த நிர்த்தமிடு மானந்த வெண் குழையாய்
ஆனந்த நீழ லமர்பரனே மானந்தார்
பாகத்தார் கண்ண காம்பிகை மால் பாகத்தார்
பாகத்தா ரோதுகின்றோர் பாகத்தார் - யோகத்தார்
கண்ணலிங்க நாயகமே காணாளி யுத்தரத்து
நண்ணு மகோற்சவமருளு நாயகமே - புண்ணியமார்
சித்திதா புத்திதா செல்விதா கல்விதா
முத்திதா வென்றே மொழி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# கண்ணலிங்கேஸ்வரஸ்வாமி

## திருவூஞ்சல்

1. சீராரும் பூங்கமல வாச வட்டூர்த்
தெக்கணப்பா யாலயத்துச் சேர்ந்து வாழும்
தாராரும் கொன்றைமதி நதியஞ் சூடுஞ்
சுடிலர் தற்பரர் சுயம் ப்ரகாச!
ஏராருங் கண்ணலிங்க சாமி யின்மேல்
இசைபெருகு திருவூஞ்சல் இனிது பாடக்
காராரும் தந்திமுகத் தைந்து செங்கைக்
கற்பகத்தி னிரு சரணங் காப்ப தாமே.

2. பொங்கு திருச் சதுர்வேதங் கால்க ளாகப்
பொற்பு நிறை யுபநிடதம் விட்ட மாக
அங்கமுறு மாகமங்கள் கயிற தாக
அழகுசெறி ஐந்துகலை யணிக ளாகச்
சங்கமுறு பிரணவமே பீட மாக
தழை மதுரத் திருவூஞ்சல் வாஞ்சை யாக
கங்கைநதி யணி சடையா யாடீ ரூஞ்சல்
கண்ண லிங்க நாயகரே ஆடீ ரூஞ்சல்

3. இடப்பாக மருவுமுமை பாங்க ராக
இன்ப மகிழ ருள் கருணை இனிமை யான
தடப்பாலைகண்ணகாம் பிகையோர் பாகந்
தழைந் தொளிர நவமணியி னணிகள் மின்ன
திடத்தாருஞ் சதுர்வேத வாக மங்கள்
செயசெயவென் றார்ப்பரிக்கத் தேவர் போற்ற
கடப்பாலார் நந்திமுத லோர் களிப்பக்
கண்ணலிங்க நாயகரே ஆடீ ரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. தெங் கினிளம் பாளை யெதிர் வாளை தாவித்
திங்களமு திடையளைந்து திகழ மீறி
அங்கமுறு பித்தர்மடு வாடி நீடும்
அம்புயத்தின் மலர்பதுங்கு மழக தான
சங்கமுறு வட்டுநகர் தெக்கி ணப்பாய்
தழைத்த நவ மணிக்கோயில் சாரு நாத
கங்கை யுமை யிருபாக வாட ருஞ்சல்
கண்ண லிங்க நாயகரே ஆட ருஞ்சல்

5 ஆதியருள் புவிவாழி செல்வம் வாழி
அந்தணர்க ளாவினிரை யாசர் வாழி
மேதகைய வணிகரொடு வேளாண் வாழி
மிக்கவுல கோர்தரும விஜயம் வாழி
காதல் செறி சிவதொண்ட ரடியார் வாழி
கண்ணலிங்க சாமியருள் கவினும் வாழி
மேதகைய மணவூஞ்ச லினிது வாழி
விருப்பமுடன் படிப்போரும் வாழி வாழி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணகாம்பிகை திருவூஞ்சல்

## காப்பு

சீராருஞ் சந்தமகி லத்தி யித்தி
சேதாம்பல் முதலான செல்வ நீடி
ஏராரும் லங்கையணி யாழ்ப்பா ணத்தி
லிசைந்த திரு வட்டுநகர்த் தெக்கி ணப்பாய்
தாராரும் கோயில் கொளு மமுத கும்பந்
தழை கணாம் பிகைமீதில் ஊஞ்சல் சாற்றக்
காராருந் தந்திமுக மைந்து செங்கைக்
கற்பகத்தி னிரு சரணங் காப்ப தாமே

### ஊஞ்சல் வண்ணம்

பொன்னிலங்கு நிலனமைத்து மரக தத்திற்
பொலிகால்கள் பவளத்தின் விட்ட மாக
தன்னிலகு சாம்புநதம் பந்த ராக
தழைந்த முத்த மழகுநிறை நாணதாக
வன்னமலி சங்கநிதி பலகை யாக
வளருமணித் திருவூஞ்சல் வாஞ்சை யாக
கன்னல் விளை தெக்கிணப்பாய் கோயில் கொண்ட
கண்ணகாம் பிகையுமையே யாடீ ரூஞ்சல்

### சபா வண்ணம்

வாமைமுத லான சுக்தி கவிகை பற்ற
மகிமாவே யாதியன கவரி சுற்ற
ஏமமலி சசிமுதலோர் வட்ட மேந்த
எண்டகைய ரதிதேவி பனிநீர் சிந்த
காமரு சீ ரரம்பையர்க ளூஞ்ச லாட்டக்
கமலை முத லைந்துசக்தி மார் துலங்க
பூமருவுந் தெக்கிணப்பா யால யஞ்சேர்
புனிதை கணாம் பிகை யுமையே யாடீ ரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகர் வண்ணம்

குழ னெழுந்த கயல்வாழை தெங்கு தாவிக்
கோகனக முகை விழுந்து குதித் தெழுந்து
வழை மருவுந் தேனருந்தி மாறி மீறி
மதிகனலயி னூடுழக்கி வயலிற் பாயும்
தழை மருவுந் தெக்கிணப்பாய் நகர மீது
தழைந்த பொன்னி னாலயத்திற் சர்வ ரூப
கழை நடன சாம்பவியே யாடீ ரூஞ்சல்
கன்ன காம் பிகை யுமையே யாடீ ரூஞ்சல்

## சம்பிரம வண்ணம்

கொத்துமணி முத்தாரங் கொப்பு வாளி
கொலிசு தண்டை காலாழி பீலி யோங்க
நத்துமூக் குத்தி பில் லாக்கு கம்மல்
நகையினணி பொன்வட்ட மாதிமின்ன
சந்த சுர நாகசுர வீணை தித்தி
சல்லாரி முதலான சரம்பு ரட்ட
கத்திகைநேர் குழலுமையே யாடீ ரூஞ்சல்
கன்னகாம் பிகை யுமையே யாடீ ரூஞ்சல்

## அங்க வண்ணம்

துங்க நிறை யுமையவளே யாடீ ரூஞ்சல்
துலங்கு திருக் கௌரியம்மை யாடீ ரூஞ்சல்
கங்கை சிவை சாம்பவியே யாடீ ரூஞ்சல்
கனி கனாம் பிகை சக்தி யாடீ ரூஞ்சல்
அங்கமல மனோன்மணியே யாடீ ரூஞ்சல்
ஐந்தங்க மாறங்க மாடீ ரூஞ்சல்
சங்க சக் கரநாமை யாடீ ரூஞ்சல்
தழை கனாம் பிகை யுமையே யாடீ ரூஞ்சல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழி

புவிவாழி உயிர்வாழி தருமம் வாழி
    போத நிறை சகவளங்கள் பொலிந்து வாழி
சவிவாழி மதிவாழி பசுக்கள் வாழி
    சைவநெறி யாசாரந் தழைத்து வாழி
தவஞானத் தெக்கிணப்பாய் நகரம் வாழி
    தையல் கணாம் பிகை யினரு டானும் வாழி
இவரோகைத் திருவூஞ்ச லினிது வாழி
    இசை படித்தோர் கேட்போர்க ளென்றும் வாழி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணலிங்கேசர் எச்சரிக்கை

சீராரு ளொளியே வெறு வெளியே
சிவமே யருந் தவமே கண்ண லிங்கேசா - எச்சரிக்கை
உருவார் மதி நதி சூடிய ஒருவா கண்ண காம்பா
உயர்பூசனை உகந்தார் கண்ண லிங்கேசா - எச்சரிக்கை

பராக்கு

திரு மருவு தெக்கிணப்பாய் தேவே பராக்கு
திங்களுடன் கங்கையணி கோவே பராக்கு
உருமருவு வட்டுநகர் உகந்தாய் பராக்கு
உத்தமர்கள் சிந்தனை உகந்தாய் பராக்கு

லாலி

திருவளரும் கங்கைநதி திங்களணி நாதா லாலி
தேவி கண்ண காம்பிகைகொள் சோதியுமைநாதா லாலி
மருமருவு வட்டுநகர் வாசபிர காசா
வண்ணமிகு கண்ணலிங்க தேசகிரு பேசா லாலி லாலி

கப்பற் பாட்டு

காசிநகர் கங்கைநதி கலந்திருந்து நல்லருளால்
தேசுநிறை கப்பலேறிச் செந்திருமால்அயன் வணங்க
இந்தையா
வாசவன் முதலான தேவர்கள் வணங்க
வளர்பேரி டம்மார பீரங்கி யார்ப்ப
பூசிதமார் கல்கற்றா பம்பாயை நீங்கிப்
பொலிவான கடன்முழங்க மீன்களெதிர் துள்ள
பாகமுறு மதுரைநகர் தூத்துக்குடி கொழும்பு
பரிவான யாழ்ப்பாண காங்கேசன் துறைமேல்
வாசமுறு வட்டுநகர் தெக்கிணப் பாயின்
வந்தருளி நாலுகந்தாய் கண்ணலிங்கா ஏலேலோ ஏலையலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணகாம்பிகை எச்சரிக்கை

திருவாரருண் மயமாகிய சிவசாம்பவி யுமையே
கருவார் தரு குலமாய் கண்ண காம்பா - எச்சரிக்கை
துடிநேரிடை யுடையாய்எமை யுடையாய்மழுப் படையாய்
கடிசேர்குழல் மலர்க்கண்ண காம்பா - எச்சரிக்கை
மதியோங்கிய தெக்கிணப்பா யின் நகருறைவாய்
கதிசேர் குழற் கண்ண காம்பா - எச்சரிக்கை

பராக்கு

திருநிறையுந் தெக்கிணப்பாய் தேவி பராக்கு
சிவமுவந்த சாம்பவியா மாவீ பராக்கு
மருமருவு குவளைவிழி மானே பராக்கு
மதியணியுஞ் சடைமுடி நம் கோனே பராக்கு

லாலி

துங்கநிறை வட்டுநகர் துலங்கு திரு வருளார்
மங்கலமார் தெக்கிணப்பாய் வாழ்ந்தருளு மணியே லாலி
எங்களையாள் சாம்பவியே ஏழுலகம் வணங்கும்
இந்திரை கணாபிகையே ஈஸ்வரியே லாலி லாலி

கப்பற் பாட்டு

திருநிறையு மூலகமுய்ய தெக்கிணப்பா யாலயத்தின்
மகமருவுங் கோயில் கொண்ட மாது கண்ண காம்பிகை சீர்
இந்தையா

ஆறங்க மந்திரங் கப்பலேயாக
அணியான பிரணவம் பாய்மரமதாக
தேறரிய சிவசக்தி பாயாக வென்றும்
சிறீங்காரம் நாணாகச் செவங்காரங் காணா
தேறுமணி சிவயோக சாக்குகளை யேற்றி
சிந்தையெனும் பாற்கடலி லோடுதே யிப்போ ஏலேலோ
ஏலையலோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணலிங்கேஸ்வரர் ஏசல்

இராகம் மகாமாளவகௌளை

கண்ணலிங் கேசலைப்பாட நங்
கற்பகப் பிள்ளையார் காப்பு எங்கள்
கற்பகப் பிள்ளையார் காப்பு. 1

திருவளர் தெக்கிணப் பாய்கண்ண லிங்கம்
செங்கையிற் பூரணை நாளில் தறு
செங்கையிற் பூரணை நாளில் 2

திருவளர் கங்கையின் வீட்டுக்குப் போய்வந்த
செய்தியறிந்தா ளந்த மாது இது
செய்தியறிந்தா ளுமை மாது. 3

கண்ணலிங் கேசுரர் வருவரென்றே யுமை
கதவினை யடைத்தனள் தானே அப்போ
கதவினை யடைத்தனள் தானே. 4

எப்போதும் போலவே யீசான் கதவினை
இருகையா லடித்தனர் தானே ஓங்கி
இருகையா லடித்தனர் தானே. 5

ஈஸ்வரி - ஆர்காணும் கெருவினில் நின்றே கதவு
அடித்தவரார் சொல்லும் நீரே இப்போ
அடித்தவரார் சொல்லுவீரே 6

சுவாமி - தேனே மரகதமே குலி நானறியாயோ
திறந்தருள் கதவினைத் தானே நீயும்
திறந்தருள் கதவினைத் தானே 7

ஈஸ்வரி:- பிள்ளையுண்டானவ ளிவ்விடத்தே யில்லை
பேசாம லப்பாலே போம் போம் சாமி
பேசாம லப்பாலே போம் போம் 8

சுவாமி:- அன்னமே குயிலே தானு நானறிநீ
அதிகமோ நித்திரை மானே - உனக்கு
அதிகமோ நித்திரை தேனே 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈஸ்வரி:- புதுவீடு கட்டிடிற் தூணிங்கே வேணும்
போம்போமது இங்கே வேண்டாம்சாமி
போம்போமது இங்கே வேண்டாம் 10

சுவாமி;- நீலகண்டனெனச் சொல்லுவா ரென்றனை
நித்திரைத் தியக்கமோ பெண்ணே - உனக்கு
நித்திரைத் தியக்கமோ கண்ணே 11

ஈஸ்வரி:- கேகே யெனச் சத்தங்கள் செயு மயில்
கெட்டி நீரப்பாலே போம் போம் சாமி
கெட்டி நீரப்பாலே போம் போம் 12

சுவாமி:- பசுபதியெனவே யென்றனைச் சொல்லுவார்
பாவை நீயறிந் திடுவாயே - இதைப்
பாவை நீயறிந் திடு வாயே. 13

ஈஸ்வரி:- மாடுக ளிங்கில்லை மேய்க்கவும் வேண்டாம்
மகத்துவமேன் பல சொன்னீர் - சாமி
மகத்துவமேன் பல சொன்னீர். 14

சுவாமி:. காடுகள் கடந்தே யோடியே வந்தேன்
கால்களும் நோகுது மானே இரு
கால்களும் நோகுது தேனே. 15

ஈஸ்வரி:- சடுத்தங்கள் பிடிக்கிறீர் கங்கையுன் பெண்டாட்டி
தானவளிடத்தினிற் போம் போம் - சாமி
தானவளிடத்தினிற் போம் போம் 16

சுவாமி:- கங்கையை யறிவேனோ அவள் வீடு தெரிவேனோ
கண்ணே நீ யென்னதான் சொன்னாய் - எந்தன்
கண்ணே நீ யென்னதான் சொன்னாய் 17

ஈஸ்வரி- இங்கும தாட்டங்கள் ஒன்றுமே யாடாது
எழும்பி நீரப்பாலே போம்போம் - சாமி
எழும்பி நீரப்பாலே போம்போம் 18

சுவாமி:- உன்னை நான் விடுவேனோ கல்யாணங்கட்டாமல்
ஒகோ நீயென்னதான் சொன்னாய் பெண்ணே
ஒகோ நீயென்னதான் சொன்னாய் 19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈஸ்வரி:- இனியேதும் பேசினாலடிப்பேனான் மட்டையால்
இங்கொன்று மாடாது போசம்போம் - சாமி
இங்கொன்றுமாடாது போம்போம் 20

விருத்தம்

சுந்தரமூர்த்தி தன்னைச் சுவாமியும் நினைந்தாரப்போ
வந்தனர் மசக்கைதீர்க்க மாட்டாமல் அவரும் நின்றார்
எந்தையார் கண்ணலிங்க ரிசைமாயன் தன்னையுன்ன
சுந்தரிவடிவில் வந்து சொல்லுவார் வெல்லுவாரே.

விஷ்ணு:- என்னடி என்வீட்டினில் வந்து நீ புகுந்தே
இருக்கிறா யப்பாலே போ போ கள்ளி
இருக்கிறாயப்பாலே போ போ 21

ஈஸ்வரி:- என்னதான் தொந்தரை இவளை நானறிவேனோ
ஏடி நீயார் சொல்லுவாயே கள்ளி
ஏடி நீயார் சொல்லுவாயே 22

விஷ்ணு:- ஈசுரர் கண்ணலிங்கேசுரர் தேவி நான்
என்னுடை வீடறியாயோ நீலி
என்னுடை வீடறியாயோ 23

ஈஸ்வரி:- அவருன்றன் புருடனென்றிடற் சாட்சி
ஆர்தான் சொல்லுவர் போ போ - தோலி
ஆர்தான் சொல்லுவர் போ போ 24

விஷ்ணு:- இன்னமுமேன் பல சொல்லுகிறாய் மானே
இவரிடம் போய் வருவோமே - நாங்கள்
இவரிடம் போய் வருவோமே.

கூடல் விருத்தம்

மாயனு முமையுமிந்த வாறினிற் கண்ணலிங்க
நாயகனிடத்திற் சென்றார் நாதனும் மிவளைப்பற்றி
தேயமா யருகிருத்தி நிறைகங்கை முடியிற் சூடி
தூய நல்லருள்புரிந்து துலங்கினார் மூவரோடும்

நம பார்வதி பதே

அரகர மகா தேவா

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2217

பராசக்தி அச்சகம், கே. கே. எஸ். வீதி, கொக்குவில்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org